# FRIDAY SERMON

**"THE DANGERS OF SOCIAL NETWORKS/MEDIA"!**

**"மீடியா அல்லது சோஷியல் நெட் வொர்க்கின் அபாயங்கள்!"**

*01 MARCH 2019*

*HADHRAT MUNIR AHMAD AZIM (A)*

**This Historical Sermon to Must Read For All People (All Muslim & Mankind) Belong to Modern Technical World**

**நவீன தொழில் நுட்ப உலகில் வாழுகின்ற அனைத்து மக்களும் வாசிக்க வேண்டிய வரலாற்றுமிக்க பிரசங்கம்**



**Nabiullah, Rassullullah, Khalifathullah, Waliullah, Al-Massih, Al-Mahdi, Mujaddid & Muhyiuddin**




**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH**
**MUNIR AHMAD AZIM**

**FRIDAY SERMON**

**01 MARCH 2019**
**(23 JAMADI'UL AAKHIR 1440 A H)**

# "THE DANGERS OF SOCIAL NETWORKS/MEDIA"!

## "மீடியா அல்லது சோஷியல் நெட் வொர்க்கின் அபாயங்கள்!"

**TAMIL VERSION / தமிழ் பதிப்பு**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.்.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

பேய்ஸ் புக், யூட்டுப், வாட்ஸாப், மெஸேன்ஜர், வி-சாற்று, இன்ஸ்டர் கிராம், ஸ்னாப்-சாற்று, டிவிற்றர் ஆகியவையினைக் குறித்து தெரியாதவர்கள் யார்? இவற்றினைப்பற்றி நாம் சோஷியல் நெட்வொர்க் என கூறுகின்றோம். அவை உலகனைத்துமுள்ள மக்களை ஒருவருக்கு ஒருவர் இணைத்து கொள்கிறது. இன்று, இரண்டு பில்லியனுக்கு அதிகமான மக்கள் இந்த சோஷியல் நெட்வொர்க்கினைப் பயன்படுத்தி வருகின்றனர். ஒவ்வொரு வாரத்திலும் ஆயிரக்கணற்கான மக்கள் புதியதாக இதில் உறுப்பினர்களாக இணைந்து வருகின்றனர். இவற்றில் பெரும்பான்மையான மக்களும் பேய்ஸ்புக்கினை பயன்படுத்தி வருகின்றனர்

மௌரீஷியஸிலும், உலகம் மொத்தமாக பேய்ஸ்புக் (Facebook) பிரபலமாக வளர்ந்து வருகிறது. அது ஜனாபிமானம் பெற்றுள்ளது. ஒவ்வொருவரும் பேய்ஸ்புக் வழியாக பயணம் மேற்கொள்கின்றனர். பத்து

வயதிலிருந்து வயதுடையவர்கள் வரையில் அதில் உறுப்பினர்களாகி வருகின்றனர். அனைத்து சமூக துறைகளைச் சார்ந்தவர்களும் இதில் உள்ளனர். திரைப்பட நட்சத்திரங்கள், கலைஞர்கள், அரசியல் வாதிகள், சமூக சேவகர்கள், மாணவர்கள், ஆண்கள், இல்லத்தரசிகள் ஆகிய பலமக்களும் பேய்ஸ்புக்கில் செயல்ப்பட்டு வருகின்றனர்.

இந்த நெட்வொர்க்கில் சில நன்மைகள் உள்ளன. ஒரு வேலை கண்ப்பிடிப்பது, அதைப்போன்றே நீண்ட காலமாக இழந்த குடும்ப உறுப்பினர்கள் அல்லது நண்பர்களைக் கண்டறிதல் போன்ற பல நன்மைகளை காணலாம். அதே கணம், அநேக அபாயங்களும் இதிலுள்ளன. குறிப்பாக முஸ்லீம்களுக்கு! பேய்ஸ்புக் என்பது ஒரு சமூக வலைதளம் ஆகிறது. ஆனால் இது குறித்து நாம் ஒரு ஆழமான ஆய்வினை மேற்கொள்வேமேயனால், உண்மையில் இது சமுகத்திற்கு எதிரான ஒரு வலைதளம் என்பதை நமக்கு உணர்ந்துக் கொள்ளலாம். இதன் பயனர்கள், வீட்டில் அல்லது அலுவலகங்களில் இருந்தாலும் அவர்கள் அதில் நிரந்தரமாக தொடர்பு கொண்டிருக்கின்றனர் என்பதை புரிந்து விடலாம். சில இளைஞர்கள் பேய்ஸ்புக்கில் போதை அடைந்தவர்களாக காணப்படுகின்றனர். அவர்கள் அத்தகைய ஒரு உலகில் தான் வாழ்ந்து வருகின்றனர். உண்மையான உலகில் இருந்து அவர்கள் இணைப்பை துண்டித்துள்ளனர். அநேக மக்கள் கம்பியூட்டரின் அதாவது லேப்டோப் (Laptop), டாப்லட் (Tablet), ஸ்மார்ட்போண் (Smart phone) போன்றவைகளின் முன் அமர்ந்து சாப்பிடுவதற்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். அவர்கள் தங்களுடைய ஒரு தனிப்பட்ட உலகில் நண்பர்களிடம் வாயாடிக் கொண்டிருக்கின்றனர். அல்லது பேய்ஸ் புக்கில் விளையாடுகின்றனர். குடும்ப உறுப்பினர்களிடமோ சொந்தபந்தத்தை சார்ந்த பிறரிடமோ சோர்ந்திருந்து உணவு உண்ணுவதற்காக நேரம் செலவு செய்வதன் முக்கியத்துவத்தை அவர்கள் உணர்ந்தவர்களல்ல.

வஹ்ஷி இப்னு ஹர்ப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார். திரு நபி (லஸ்) அவர்களின் தோழர்களில் சிலர் கூறியிருக்கின்றனர்.

**“அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் சாப்பிடுகிறோம். ஆனால் அதில் எங்களுக்கு திருப்தி கிடைப்பதில்லை. திரு நபி (ஸல்) அவர்கள் வினவினார்கள்**

**நீங்கள் தனித்தனியாக அமர்ந்து சாப்பிடுகின்றீர்களா? "ஆம்" என அவர்கள் பதிலளித்தனர். நீங்கள் ஒருங்கிணைந்து அமர்ந்து அல்லாஹ்வின் நாமத்தை கூறியவாறு புசித்துக் கொண்டால் அதில் உங்களுக்கு அருட்கள் உள்ளன."** (அபூதாவூத்)

ஒருங்கிணைந்து அமர்ந்து புசித்துக் கொள்ளும் பொழுது, குடும்பம் உறவுகளை அது வலுப்படுத்துகிறது. நிச்சயமாக அது மேலும் அருட்களுக்கு வழிவகுக்கின்றது. இஸ்லாம், சமூக உறவுகளை ஊக்குவிப்பதுடன் எல்லா நம்பிக்கையாளர்களும் ஒரு குடும்ப உறுப்பினர்களைப் போன்று வாழவேண்டும் என கற்பிக்கிறது.

பேய்ஸ்புக் நமக்கு அதிகமாக தற்காதலை அதாவது தனித்துவத்தை பகிர்ந்து வழங்குகிறது. உளவியலாளர்கள் மற்றும் பன்மொழியறிஞர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப்படி, பேய்ஸ்புக்கின் சுவர்களில் "நான்" "என்னை" "நானே" போன்ற தனிப்பட்ட பரதிபெயர் சொற்களே பெருபான்மையின்றி "நாங்கள்" "சமுதாயம்" "மானிடகுலம்" போன்ற கூட்டுவார்தை சொற்க்கள் மிக அரிதாகவே காணப்படுகிறது. பேய்ஸ்புக் பயன்படுத்துகின்றவர்கள் அதிகமும் ஒரு சுயமையமாக மாறிவிடுகின்றனர். தங்களைக் குறித்த காரியங்களை மட்டும் முன்னோக்கி வைப்பதற்கும், தங்களுக்க மட்டும் முக்கியத்துவம் அளிப்பதற்கும் அவர்கள் விரும்புகின்றனர். அதில் அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். நெட்வொர்க்கில் தங்கள் விவரத்தை மட்டும் அழகுபடுத்துவதற்றும், தங்கள் காரியத்தில் மட்டும் கவனமாக இருப்பதற்கும் அவர்கள் விரும்புகின்றனர். சமூகம் மற்றும் குழுவாக வாழ்வதற்கான கருத்தாக்கத்தில் பொதுவாக ஒரு சரிவு ஏற்பட்டுள்ளது. தனி நபர் வாழ்க்கை அதாவது தனித்துவ வாழ்க்கை முறைகள் அதிகரித்து விட்டது என்பதற்கு எடுத்துக் காட்டுகள் நிச்சயமாக எண்ணற்றவை. பெரும்பாலான நேரங்களிலும் இத்தகைய நபர்கள் வெளி நாடுகளுக்கு பயணம் செய்கின்றனர். சமூக கூட்டங்கள், விளையாட்டுகள் அல்லது கலாச்சாரா நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் பங்கேற்கின்றனர். அது பெருமைக்குரியதாக அவர்கள் எண்ணுகின்றனர். அத்தகைய நிகழ்ச்சிகளில் பங்கேற்றப்பின் அவர்கள் சூப்பர் புகைபடங்கள் வெளியிடுவார்கள். அப்புகைபடத்தில் அவர்கள் கோணல்மாணலாக உட்காந்திருப்பார்கள் அல்லது நிற்பார்கள். பின்னர் அவர்கள்

“நான் இந்த கோணத்தில் இருந்திருந்தால் மிக அழகாக இருந்திருப்பேன்.” “நான் அந்த கோணத்தில் நின்றிருந்தால் அழகாக இருந்திருப்பேன். என்னை பாருங்கள்.... என்றெல்லாம் கூறுவார்கள். சுருக்கமாக, அவர்கள் சுயம் தற்பெருமை கொள்ள முற்படுகின்றனர்.

இப்போது இந்த மக்களுடைய வாழ்கையின் வரையறை பேயிஸ்புக் மற்றும் இன்ஸ்ட்கிராம் போன்றவையின் கீழ் கொதிக்கிறது. நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அந்நியர்களின் காலவரையற்ற பக்கங்களை சுருளழிப்பதன் வாயிலாக தங்களது விலைவாய்ந்த நேரத்தை அவர்கள் வீணடிக்கின்றனர். அவர்கள் தங்களது கருத்துகளை தெரிவிக்கின்றனர். அவர்களின் தனிப்பட்டகாரியங்கள் பற்றிய வீடியோக்கள் மற்றும் புகைப்படங்களை போடுகின்றனர். இதனை பார்வையிடும் பொழுது, அவர்கள் பொதுமக்களுக்காக நிலைகொள்பவர்கள் என்றும் தனிப்பட்ட எதுவும் அவர்களக்கு இல்லை என்றும் தோன்றும். பேஸ்புக் அதைப்போன்று பிற மீடியோக்கள் இன்று மக்களுக்கு போதை மருந்து போல் மாறிவிட்டது. இதில்லாமல் எதுவும் செய்ய முடியாத நிலையினை அவர்கள் சென்றடைந்துள்ளனர். நேர்முகமாக பேசுவதற்கு பதிலாக, சுகாதாரமான ஒரு வாழ்கையினை அமைத்து கொள்வதற்கு பதிலாக, இஸ்லாமை கண்டிக்கத்தக்க செயல்களில் அவர்கள் ஈடுபடுகின்றார்கள்.

**பல முஸ்லீம் பெண்களும் இதற்கு இரையாகி விட்டார்கள். உண்மையில் இது துரதிர்ஸ்டவசமானது. புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை அவர்கள் வெளியிடுகின்றனர். அவர்கள் மிக சிறந்த முறையில் ஆடைகளை அணிந்து, தங்களை அலங்கரித்து விருந்து, திருமணம் மற்றும் ஈது கொண்டாட்டங்களில் கூட பங்கேற்கின்றனர். சிலர் பர்தா அணிந்துக் கொள்கின்றார்கள். சிலர் பர்தா அணியாமலும் பங்கேற்கின்றார்கள். அவர்கள் தங்கள் ஹிஜாப்பை ஒரு விளையாட்டு பொருள் என்று வரையறுக்கின்றார்கள். இது ஒரு முக்கியத்துவமற்ற காரியம் என அவர்கள் எண்ணுகின்றார்கள். அல்லாஹ் தனது எல்லையற்ற ஞானத்தினால், பெண்கள் தாமாகவே முன்வந்து அந்நியர்களிடம் தங்கள் அழகினை வெளிப்படுத்த வேண்டாம் என்று கட்டளையிட்டுள்ளான். அனுமதிக்கப்பட்டவர்களிடத்தில் மட்டும் அவர்கள் தங்கள் அழகை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.**

திருக் குா- ஆனிலும் திருகதீஸிலும் இதற்கு பலவேறு உதாரணங்களை காணலாம்.

**“நீங்கள் உங்கள் வீடுகளிலேயே தங்கியிருங்கள். முன்னார் ஜாஹிலியா காலகட்டத்தில் திரிந்து கொண்டிருந்ததைப் போல் நீங்கள் திரியாதீர்கள்” (33:34)**

இப்போது நமக்கு பார்போம்! ஜாஹிலியா காலகட்டத்தில் பெண்கள் நடந்துக் கொண்டதைவிட மோசமான நிலையில் இன்று முஸ்லீம் பெண்கள் நடந்துக் கொள்கின்றார்கள். **கடந்த காலங்களில் சமூக வலைத்தளம் இல்லாமல் இருந்தது. இன்று, நம்முடைய முஸ்லீம் பெண்கள் செய்வது என்ன என்பதை முழு உலகும் பார்வையிடுகின்றது. அதைப்போலத்தான் முஸ்லீம் சகோதரர்களின் காரியமும்!**

இத்தகைய காரியங்கள்யாவும் பொது மக்களின் முன்னிலையில் இருக்கும்போது நாங்கள் நல்லவர்கள் என்று கூற எந்த முஸ்லீமுக்கு தைரியம் இருக்கும்? அவர்களுக்கு உணரமுடியாது. **இன்டர் நெட் உலகம் என்பது அவர்களின் ஸ்மார்ட் போண்களைக் கூட ஹேக் (Hack) செய்ய முடியும் அளவில் அமைந்திருக்கின்றது. அது வழியாக அவர்கள் வாழ்கையின் அனைத்து விவரங்கள், படங்கள் மற்றும் வீடியோக்களுடன் பெற்று விடலாம். இவை ஒரு பாதுகாப்பல்ல. ஸோஷியல் நெட் வொர்க்கினை பயன்படுத்துகின்ற அனைவருக்கும் இது பாதகமாகும்.**

இஸ்லாம் அதன் தோழர்களை வரம்பிற்குள் இருக்குமாறு அறிவுறுத்துகிறது. இறைகட்டளைகளை கடைபிடிப்பதற்கும் அது தேவைப்படுகிறது. அவ்வாறேயானால், சாத்தானின் சேனைகளிடமிருந்து நமக்கு பாதுகாப்பினை பெற்றுவிடலாம். இஸ்லாம் அடிப்படையான காரியங்கள் இதுவே தான். ஆனால் துரதிஷ்டவசமாக அதற்கு மக்கள் மிக குறைவான மதிப்பினை மட்டுமே அளிக்கின்றனர்.

“எனக்கு நேரமில்லை” என்று இன்று எல்லோரும் கூறுகின்றனர். ஆனால் நான் கேட்கிறேன். நமது நேரத்தை எவ்வாறு செலவு செய்ய வேண்டும் என்பதைக்குறித்து இன்று நமக்கு தெரியுமா? பேய்ஸ் புக்கில் மூழ்கியிருந்து

எவ்வளவு நேரத்தை வீணடித்தார்கள் என்று அவர்களுக்கு தெரியாது. அவர்கள் கம்பூட்டறில் அடைக்கலம் கொள்பவர்களாக மாறிவிட்டனர். போதை மருந்துகளை போன்று அவையின்றி அவர்களளுக்கு வாழ முடியாத நிலை உருவாகியது. எவ்விதமான போதையாகயிருந்தாலும் சரி, அது அபாயமாகிறது. அதிகமளவு பேஸ்புக் பயன்படுத்துகின்றவர்களில் பலரும் தற்கொலை செய்ததாக தகவல்கள் உள்ளன. இந்த கொக்கியில் மாட்டிக் கொண்டால், அதிலிருந்து விடு பெற மிக சிரமகரமாகும். அவர்கள் அதில் மேன்மேலும் மூழ்கிவிடவும், பிறரின் தனிப்பட்ட வாழ்க்கை இரகயங்களைக் குறித்து அறிய ஆவலாகி விடவும், அதை போன்றே பிற காரியங்கள் மீது ஆர்வமுடையவர்களாக மாறிவிடவும் செய்கின்றனர். இது அவர்களுக்கு தீங்கிழைப்பதாக இருக்கின்றது. ஆனால் அதனை அவர்கள் மறந்து விடுகின்றனர்.

அபூகுறைரா (ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார்கள். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**“ஒரு நபரில் குடிகொள்ளம் பரிபூரணமான இஸ்லாமின் ஒரு பகுதி, அவர் தேவையில்லாதவற்றிலிருந்த விலகி நிற்கின்றார் என்பதாகும்” (திர்மிதி)**

**கூடுதலாக, வதந்திகள் பரப்புதல், தவறான செய்திகளை உருவாக்குதல் போன்றவை சுய நலத்தின் விளைவாகும். அது பிறரின் தனிப்பட்ட முறையிலான இரகசிய காமத்தின்பால் ஒளிந்து பார்க்க அவர்களை அழைத்து செல்லுகின்றது.** இவையாவும் இஸ்லாம் நமக்கு கற்பித்த பாடத்திற்கு மாறாகும். இத்தகைய தீய செயல்களில் மூழ்குவதன் மூலம், முக்கியத்துவம் வாய்ந்த பல நல்ல காரியங்களை நாம் மறந்துவிடுகிறோம். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலான தொழுகைகள் அல்லது புனித குர்-ஆனின் வாசிப்பு மற்றும் திரு குர்- ஆனிய ஆய்வு போன்றவற்றை நாம் புறக்கணிக்கின்றோம்.

உலகின் பெரும்பகுதியும் இப்போது பேய்ஸ்புக்கின் அடிமைகளாக மாறி விட்டனர். பேஸ்புக் இல்லாத ஒரு நாளுக்காக வாதிடுவது அவசியமாகியிருக்கின்றது. நேற்றைய நாள் அதாவது 2019 பிப்ரவரி 28-ஆம் தேதி வியாழக்கிழமை, பேயிஸ்புக் இல்லாத சர்வதேசிய நாளாகும். ஆனால் உண்மையில் நாம் நமது வாழ்க்கையினை முழுமையாகவும் வாழ்ந்து காட்ட

வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட வரம்புக்குள் நின்று நாம் செயல்படவேண்டும். ஏதேனும் ஒரு காரியத்தில் மூழ்கி வாழ்வதிலிருந்து நாம் மீட்சியினை பெற வேண்டும். **சோஷியல் நெட்வொர்க் முழுமையாகவும், மோசமானது என்று நான் கூறவில்லை. மாறாக அதில் மிக அதிகமளவு பயன் உள்ளது. ஆனால் இவை எப்போது பயன்படுத்த வேண்டும், எவ்வாறு பயன்படுத்த வேண்டும் எனபதை குறித்து நாம் உணர்ந்திருக்க வேண்டும்.** இன்று, உலகமயமாதலின் வாயிலாக நாம், அதாவது முஸ்லீம்மக்களுக்கு பயனளிக்கும் வகையிலான கருவிகள் தோன்றியிருக்கின்றது. இனடர் நெட் மற்றும் நவீன காலகட்டத்தில் மிக சிறந்த தொழில் நுட்ப்பங்களின் அடிப்படையிலான கருவிகள் வழியாக இஸ்லாமை பரப்பிக்கொள்வதற்கான நல்ல வாய்ப்பு நமக்கு வந்தடைந்துள்ளது. உலகிற்கு உண்மையின் மொழியினை கற்பிப்பதற்கும், ஆன்மீகத்தின் மொழியை கற்பிப்பதற்கும், நாம் அறிவினை மேன்மேலும் ஒளிர வைப்பதற்குமான சிறந்த வாய்ப்பு நமக்கு வந்தடைந்துள்ளது.

**ஆகவே அல்லாஹ்வை மகிழவைப்பதற்காக மட்டும் நாம் அவையினை பயன்படுத்துவோம். நமது நம்பிக்கையை கட்டியெழுப்பவும் அதனை பலப்படுத்தவும் அவையை பயன்படுத்துவோம். நம்முடைய ஈகோ மற்றும் ஆடம்பரங்களை வெளிப்படுத்துவதற்கல்ல! பயனற்ற காரியங்களுக்காக நம் விலை வாய்ந்த நேரத்தை இழக்காமலிருப்போம். இவ்வுலகிலும் நாளை மறுவுலகிலும் பயனற்ற காரியங்களில் நாம் பார்வையிடாமல் இருப்போம். அல்லாஹ்விடம் சேர்ந்து நிற்பதற்காகவும், நம்மை படைத்தவனிடம் நெருங்கிகொள்வதற்காகவும் அந்த நேரத்தை நமக்கு பயன்படுத்துவோம்.** சமூகத்திற்கு சேவை புரிய பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும். வாரத்தின் இறுதி அல்லது பள்ளி விடுமுறைகளில் சமுக வலைதளத்திற்கு பின்னால் சென்று தங்களது நேரத்தையும், ஆற்றலையும் தேவையின்றி வீணாக்குவதற்கு பதிலாக விளையாட்டுகளில் பங்கேற்பதற்கு பிள்ளைகளை அறிவுறுத்துங்கள்.

சோஷியல் மீடியாக்களை பயன்னடுத்துவதில் அவர்கள் எதிர்கொள்ளும் ஆபத்துகளை உணர அல்லாஹ் நம் இளைஞர்களுக்கும், பெரியோர்களுக்கு உதவி புரியட்டும் ஆமீன். நம் நம்பிக்கைக்கு தீங்கு விளைவிக்கும் பயனற்ற செயல்களிலிருந்து நாம் விலகி நிற்க வேண்டும். பயனளிக்கும் செயல்களில்

நிரந்தரம் நாம் ஈடுப்பட்டு, அதிலிருந்து நற்பலனை நாம் பெற வேண்டும். உலகின் அனைத்து மூலைகளிலும் தெய்வீக செய்தியை பரப்புவதை நம் குறிக்கேளாக இருக்க வேண்டும். அதற்கான கருவிகள் நம்மிடம் உள்ளது. அதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை நமக்கு கற்போம். **உங்களுக்கு சந்தேகம் இருந்தால், அதனை பயன்படுத்த அறியாமலிருந்தால் நீங்கள் அவற்றிலிருந்து மாறி விடுங்கள். அந்நிலையில் அல்லாஹ்வின் வசனங்களை பரப்புவதை உங்கள் குறிக்கோளாக எடுத்து கொள்ளுங்கள். உங்கள் பேச்சுத்திறன்களை பயன்படுத்துகள். தப்லீக் செய்யுங்கள் அல்லாஹ்வின் பால் மக்களை அழைத்து கொள்ளுங்கள். அவனது மார்க்கத்தின் பால் மக்களுக்கு வழிகாட்டுங்கள். மீடியா தொடர்பை விட மிக சிறந்நது நேரடியான தொடர்பு தான்.**

இந்த பேருரையயினை மிக நல்லமுறையில் புரிந்து கொள்வதற்கு அல்லாஹ் உங்களுக்கு உதவி புரியட்டும். **நீங்கள் சோஷியல் நெட்வொர்க்கின் அடிமைகள் என்றால் நீங்கள் அதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தை கண்டுகொள்ளுங்கள். அல்லாமல் மீடியா உலகத்தில் மூழ்கி உங்களின் விலை வாய்ந்த நேரத்தை இழக்கமால் இருங்கள்.** அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய உண்மையான வாழ்க்கையினை வாழ்ந்து காட்டுங்கள். விலக்கபட்ட துறைகளிலிருந்து விலகி நின்று, அல்லாஹ்வின் திருப்தியனை பெற முயற்சி செய்யுங்கள். இன்ஷா அல்லாஹ் ஆமீன்.

**Translated by:**

*Naib Amir - Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY


**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774



**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**